Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ் ISSN: 3049-0723 (Online)
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

**Volume 1, No. 04 | January 2025**

# How does the Silappadhikaram depict the Pandya king and his reign?

**Dr. A. Anandhi**
Assistant Professor, Tamil Department, V.V. Vanniyapperumal Women's College
Virudunagar 626001.

**ABSTRACT**

Since "Silappathikaram" serves as a historical dramatic poem, it contains many observations regarding the social structure of the people of that era. According to the notion that literature acts as a mirror reflecting the times, the Madurai Kandam vividly illustrates the way of life of the people during that period. Just as Madurai thrived with all its prosperity two thousand years ago, it continues to stand strong today without diminishing its status.The aim of this article is to examine the qualities of the noble Velanjai, mentioned in Silappathikaram, his governance, and the consequences arising from the failure of the Pandyan justice system.

**ARTICLE INFO**

Received : 01 Dec 2024
Revised : 04 Dec 2024
Accepted : 01 Jan 2025

**KEYWORDS**
Silappathikaram, *Pandiya King, Depict*

# சிலம்பு காட்டும் பாண்டிய மன்னனும் ஆட்சியும்

**முனைவர் ஆ.ஆனந்தி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர் 626001.

## முன்னுரை

சிலப்பதிகாரம் வரலாற்று நாடகக் காப்பியமாக இருப்பதால் அதில் அக்கால மக்களின் சமூக அமைப்பு குறித்துப் பல கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்பதற்கேற்ப மதுரைக் காண்டம் அக்கால மக்களின் வாழ்வியலை நன்கு புலப்படுத்துகிறது. மதுரை மதுரை அன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எல்லா நலன்களும் பெற்று விளங்கியது போன்றே இன்றும் தன் நிலையில் தாழாது உயாந்தே உள்ளது.

அத்தகைய மதுரையில் சிலம்பில் குறிப்பிடப்படும் நெடுஞ்செழியனின் பண்பு நலன், அவனது ஆட்சிமுறை, பாண்டியன் நீதி தவறியதால் விளைந்த விளைவு ஆகியவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மதுரையும் சிலம்பும்

' கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடி' என்ற சிறப்புக்குரியது நம் தமிழ்க்குடி. இத்துனைத் தொன்மை வாய்ந்த தமிழ்ப் பெருங்குடியினர் வாழும் பகுதியே 'தமிழ்நாடு' எனப்பட்டது. அதில் ஒரு பகுதியாக மதுரை காணப்படுகிறது.

மதுரை மாநகரம் காலத்தால் பழமையானது. தமிழ்ப் பண்பாடு, தமிழர் நாகரிகம் ஆகியவற்றின் நிலைக்களனாய் இருந்து வருகின்றது. மதுரை மாநகர் செம்மையாகக் கட்டமைக்கப்பட்டதாகும். மதுரையில் தாமரை மலரின் அக இதழ்களைப் போன்று தெருக்கள் அழகுற அமைந்துள்ளன. அவ்விதழ்களின் நடுவே

உள்ள மொட்டைப் போன்று நகரின் நடுவில் ஆலவாய் அண்ணல் கோயில் உள்ளது. மதுரை கோயில் நகரம் வன்றும் திருவிழா நகரம் என்றும் கூறும் சிறப்பிற்குரியது. மதுரையின் சிறப்பைப் பலரும் அறியும் வண்ணம் தென்றல் காற்று வீசுவதை,

"புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்
பொதியில் தென்றல் போலாது ஈங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்" 1

என்கிறார் இளங்கோவடிகள்.

## மூவேந்தரின் சிறப்பு

இமய மலையின் உச்சியில் கயலமீன் சின்னத்தைப் பொறித்தவன் பாண்டியன். அதன் பக்கத்தில் சோழன் புலியையும் சேரன் வில்லையும் பொறித்தனர். பாரத நாட்டில் உள்ள பிற நாட்டு மன்னர்களும் தம் கட்டளையைக் கேட்டு நடக்கும்படி அரசாட்சி செய்த சிறப்பினை உடையோர் பாண்டியர். இப் பாண்டிய மன்னர்களின் பெருமையினை,

"கயல் எழுதிய இமய நெற்றியில்
அபல் எழுதிய புலியும் வில்லும்
நாவலம் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்ப பார் அரசாண்ட..." 2

என்று இளங்கோவடிகள் புகழ்ந்துள்ளார்.

## பாண்டியர் வரலாறு

பாண்டியர் பழந்தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒருவராவர். பாண்டியர் மதுரை உள்ளிட்ட தென் தமிழகத்தை ஆட்சி செய்தனர். எந்த ஒரு மன்னர் குலத்துக்கும் இல்லாத நெடிய வரலாறு பாண்டியர்களுக்கு உண்டு. இவர்களைப் பற்றிய வரலாறு புராணங்களாகவும், இலக்கியங்களாகவும் இருக்கின்றன.

பாண்டியர் ஆட்சியில் சிற்றூர் பல சேர்ந்து கிராம சபை உருவாக்கப்பட்டது. நிலம், கல்வி, மனை வைத்திருப்பவர் மட்டும் தான் ஊரவை உறுப்பினராக இருக்க முடியும். உறுப்பினர் பெருமக்கள் ஆளுங்கணக்கர் என்றழைக்கப்பட்டனர். பாண்டியர் சந்திர வம்சத்தைச் சார்ந்தவர்கள் எனவும் வேப்பம் பூவை அணிந்தவர்கள் எனவும் கூறப்படுகின்றனர்.

## பாண்டியன் நெடுஞ்செழியன் குலம்

பாண்டியன் நெடுஞ்செழியனின் மரபில் தோன்றிய முன்னோர்களின் பெருமை சிறப்புமிக்கது. நெடுஞ்செழியனின் முன்னோனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன், புகழ் நிறைந்த நல்ல அமைச்சரோடு ஊழிக் காலமெல்லாம் பகைவர் தமக்கு அடிமைப்பட்டு நடக்கும்படியான உயர்ந்த செங்கோல் மரபில் தோன்றியவன். தமிழ் மன்னர்களாகிய சேர, சோழர்களோடு குறு நில மன்னர்களையும் வென்று, தனது செங்கோன்மையால் உலகில் அறம் நிலைபெறச் செய்தவன். நிலந்தரு திருவருள் பாண்டியன் எதனையும் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவனாக இருந்ததனை,

"முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்று
இடியுடைப் பெருமழை எய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன்"3



Copyright: Author

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகின்றது. மேகத்தைத் தன கட்டுப்பாட்டில் வைத்து தன் நாட்டில் மழை பெய்யச் செய்து, விளைச்சல் பெருக்கி வளம் சுரக்க ஆண்ட பெருமை இப்பாண்டிய மன்னனையே சேரும். மேலும் பாண்டிய மன்னன் ஒருவன், இந்திரனின் வலிமையான ஆரத்தை தன் மார்பில் அணிந்து இருந்தான். தெற்கில் கடலால் அழிந்த நிலப் பகுதிகளுக்கு ஈடாக வட திசையில் உள்ள கங்கை ஆற்றையும் இமய மலையினையும் கைக் கொண்டான். பாரதத் திருநாட்டை ஒரு குடைக்கீழ் ஆண்ட பெருமை பெற்ற தென்னவன் என்ற சிறப்பினை பெற்றான். இதனை,

"குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன்"4

என்ற பாடல் அடிகள் பதிவு செய்கின்றன. ஒருமுறை பாண்டிய குல மன்னன் ஒருவன் மீது இந்திரன் பொறாமை கொள்ள, பாண்டியன் வேலெறிந்து கடலை வற்ற வைத்து இந்திரனைத் தன் பாதம் பணிய வைத்தான். இத்தகைய சிறப்பு மிக்க சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டதை,

"திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்

செங்கண் ஆயிரத்தோன் திறல் விளங்கு ஆரம்

பொங்கு ஒளி மார்பிற் பூண்டோன்" 5

என்ற சிலப்பதிகாரக் கூற்றின் வழி அறிய முடிகிறது.

இம்மரபில் வந்த பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் சிறப்பிற்குரியவனாகவும், சிவபெருமானின் வழித்தோன்றலாகவும், பொதிகை மலைத் தலைவனாகவும் போற்றப்பட்ட வீர வேந்தனாக சிலம்பில் காட்டப்படுகிறான்.

### மன்னனின் பண்பு நலன்கள்

பண்பு நலன் என்பது மனிதனின் ஆளுமைத் திறனை வளர்ப்பதாகும். அப்பண்பை என்றும் கைவிடாது அதை நல்ல செயல்களின் மூலம் காப்பது மனிதனின் கடமையாகும். நீதியையும் அறத்தையும் விரும்புதலால் பிறருக்கும் தமக்கும் பயன்படும் செயல்பாடுகளை உடையவரது பண்பினை உலகத்தார் அனைவரும் போற்றுவர். ஆகையால் தான் வள்ளுவர்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்"6

என்கிறார். இக்குறள் வழி ஒரு நாட்டு மன்னன் எப்படி இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். மு.வரதராசனார் "நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன் மக்களுக்கு 'தலைவன்' என்று தனியே கருதி மதிக்கப்படுவான்" என்று கூறுகின்றார்.

மன்னன் என்பவன் வெற்றியால் மட்டுமல்லாது தோற்றத்தாலும் பணபு நலன்களாலும் அனைவராலும் போற்றத்தக்கவனாக விளங்கினான் என்பதை இலக்கியங்கள் பல எடுத்துரைக்கின்றன. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன், பொருநருக்கு கன்று பிடியோடு களிற்று யானைகளைக் கொடுத்தும் பொற்றாமரைப் பூவினைச் சூட்டியும் சிறந்த அணிகலன்களை மற்றவருக்குக் கொடுத்தும் சிறப்புப் பெற்றவன். அவன் தன் நண்பருடைய குடியைப் பெரிதும் உயர்த்துபவன். தன் சினத்திற்கு ஆளாகியோருடைய அரசுரிமையை மாற்றுபவன். கொற்கை நகரில் வாழ்வோரால் மிகவும் விரும்பப்படுபவன் என்பதனை,

"நற்கொற்கையோர் நசைப் பொருந"7

என்ற அடியால் உணரலாம்.

 Copyright: Author

நிலம் தருகின்ற வளமான செல்வத்துடன் அருளாட்சி செய்வதைக் கடமையாக நினைத்து அதன்படி நடந்தவர்கள் பாண்டிய மன்னர்கள். அவர்களது சிறப்புப் பொருந்திய செங்கோலும் வெண்கொற்றக்குடையின் குளிர்ச்சியும் வெற்றியும் உலகம் முழுதும பெருமையுடன் விளங்கும் தன்மையுடையன. மக்கள் பிழைப்பதற்காக வேற்று நாடு செல்வதை அறியாத அளவிற்கு வளம் மிக்க நாடாக மதுரையை ஆட்சி செய்தனர் பாண்டிய மன்னர்கள்.

### அரசவை

வள்ளுவர்,

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"8

என்னும் குறள் வழி, உலகத்தாரை எல்லாம் மன்னவன் காப்பாற்றி வருவான்; முன்ற தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தால் அதுவே அவனைக் காப்பாற்றி நிற்கும் என்கிறார். ஆகையால்தான் அறங்கூறு வையத்துடன் ஐம்பெருங்குழுவும் மன்னர்க்குத் துணையாக நின்று செங்கோலாட்சி சிறக்கச் செய்தமை புலப்படுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியன் அவையிலும்,

"ஆசான் பெருங்கணி அறக்களத்து அந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் - தம்மொடு
கோயில் மாக்களம் குறுந்தொடி மகளிரும்
ஓவியச்சுற்றத்து உரையவிந்து இருப்ப
காழோர் வாதுவர் கடுந்தேர் ஊருநர்
வாய்வாள் மறவர்" 9

போன்ற ஆன்றோர் நிறைந்திருந்தனர்.

### செங்கோன்மை

செங்கோல் ஆட்சியே நாட்டை ஆளுகின்ற மன்னனுக்குரிய தனிச்சிறப்பு மிக்க பண்பாகும். ஆகையால்தான் வள்ளுவர்,

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி"10

என்று கூறியுள்ளார். இவர் செங்கோலாட்சி குறித்த அதிகாரத்திற்கு 'நடுவுநிலைமை' என்றே பெயர் வைத்துள்ளார்.

பாண்டியர்களின் செங்கோன்மை அழியாப் புகழ் வாய்ந்தது. பாண்டியர் ஆட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு நிறைந்திருந்தது. கொடூர குணம் கொண்ட உயிரினங்கள் கூட தீங்குகள் செய்யாதிருந்தன. இவ்வாறு நல்லாட்சி செய்து மக்களைக் காத்து நின்ற பாண்டியரின் பெருமையை,

"கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா
அரவுஞ் சூரும் இரைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோல தென்னவர் காக்கும் நாடென


Copyright: Author

எங்கணும் போகிய இசையோ பெரிதே"11

என்று சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. இதன்வழி, பாண்டிய நாடு பாதுகாப்பு நிறைந்த ஊர்; தன் எதிரில் வரும் விலங்குகளை கொல்லக்கூடிய கரடியும் கரையான் புற்றுகளைத் தோண்டாது; ஒளி பொருத்திய வரிகளை உடைய புலியும் மான் கூட்டத்தோடு பகைமை கொள்ளாது; பாம்பும் கொடிய தேவதையும் இரை தேடி அலையும் முதலையும் பிறகுக்குத் துன்பம் செய்யாது; கார் மேகத்தை ஊடுருவி உறுமும் இடியும் மக்களை வருத்தாது என்பதை உணர முடிகிறது. செங்கோல் ஆட்சி செய்யும் பாண்டிய நாடு இத்தகு சிறப்புடையதாய் இருந்துள்ளது.

மேலும் மதுரை மாநகரம் பாண்டியரது கோலின் செம்மையும் வேலின் வெற்றியும் சிறப்புற்று விளங்கிய இடமாக இருந்ததனை,

"நிலத்தரு திருவின் நிழல்வாய் நேமி
கடம் புணர் உருட்டும் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொற்கை "12

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

நாட்டின் தலைவனான மன்னன் மக்கள் தவறு செய்யுமிடத்து ஆராய்ந்து தண்டிக்கும் தகுதி வாய்ந்தவன். ஆகையால் மன்னன் என்பவன் நடுநிலை தவறாத, ஒருசார்பு அல்லாத குணம் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறில்லாது மன்னனே தவறு செய்தால் அது மிகப்பெரிய குற்றுமாகும். இதனை பாண்டியன் நெடுஞ்செழியன் நனகுணர்ந்திருந்தான். அதனால் தான் தனது மாபெரும் தவற்றை உணர்ந்த அளவிலேயே,

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்; யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகயென் ஆயுள்"13

என்று கூறி மயங்கி விழுந்து இறக்கிறான்.

பாண்டியன் தனது தவறான நீதியால் வளைந்த செங்கோலைத் தம் உயிராகிய ஆதாரத்தைக் கொடுத்து நிமிர்த்தியமையை,

"வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"14

என்று சேரன் செங்குட்டுவன் கூறுவது நோக்கத்தக்கது.

இங்ஙனம் பாண்டியனின் ஆட்சியும் பண்பும் போற்றக் கூடியதாக இருந்தமைக்கு மாங்காட்டு மறையோனின்,

"தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும்
கண்மணி குளிர்ப்பக் கண்டேன்" 15

என்ற கூற்று அரண் செய்கிறது.

## காவலும் கள்வரும்

நாட்டினை மிகச் சிறப்பாக ஆளுவதற்கு மன்னனின் படைபலம் முக்கியமானதாகும். மதுரையின் மதில்கள் பாதுகாப்பு நிறைந்து காணப்பட்டன. பலவகையான ஆயுதங்கள் அங்கிருந்தன. இதனை அடைக்கலக்காதை விரிவாக எடுத்துரைக்கிறது.

ஊர்க்காவலர் மதுரை நகரத்தைக் காத்து வருவதால் ஊர் மக்கட்கு எவ்விதக் கவலையும் இல்லை. அதனால் ஒளி நிறைந்து அடங்கி அமைதியாக இருக்கும் கடலைப் போலப் படுக்கையில் இனிமையாகத் துயில் கொண்டனர். ஊர்க்காவலர்களின் சிறப்பை மதுரைக்காஞ்சி,

"வயக்களிறு பார்க்கும் வயப்புலி போல
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு தேர்ச்சி
ஊர்க் காப்பாளர் ..................." 16

என்றுரைக்கிறது.

இத்தகைய காவலர்கள் இருந்தும் மதுரையில் கள்வர்களும் நிறைந்து இருந்தனர். களவுத் தொழில் செய்யும் திருடர்கள், மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்ற எட்டையும் தங்களுக்குத் துணையாகக் கொண்டு உலவினர். அதற்குச் சிலம்பு பல சான்றுகளை நல்குகின்றது.

.முன்பொரு காலத்தில் திருடன் ஒருவன் பகல் வேளையில் வெளிநாட்டுத் தூதுவர் போல அரண்மனை மாளிகையில் இருந்து, இரவு வேளையில் பெண்ணைப் போல ஒப்பனை செய்து கொண்டு அரண்மனையில் நுழைந்து யாரும் காணா வகையில் இளவரசரின் அறைக்குள் சென்று வைர மாலையை எடுத்துச் சென்றான். இதனை,

"தூதர் கோலத்து வாயிலின் இருந்து
மாதர் கோலத்து வல்இருள் புக்கு
விளக்கு நிழலில் துளக்கிலன் சென்று ஆங்கு
இளங்கோ வேந்தன் துளங்கு ஒளிஆரம்"17

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

மற்றொரு நாள் மழைக்காலத்தில் இரவு வேளையில் இருள் சூழ்ந்திருக்க. ஒருவன் நிலத்தைத் தோண்டும் உளியை உடையவனாகவும் கருத்த போர்வையை உடையவனாகவும் அணிகலன்களைத் திருட வேண்டும் என்ற ஆசையில் புலி போன்று நிற்க, துரத்திச் சென்ற வீரனால் அவனை எங்கு தேடியும் காண இயலவில்லை என்பதை,

"திருந்துவேல் தடக்கை இளையோன் கூறும்
நிலனகழ் உளியன் நீலத் தானையன்
கலன்நசை வேட்கையிற் கடும்புலிபோன்று
மாரிநடு நாள் வல்இருள் மயக்கத்து
ஊர் மடி கங்குல் ஒருவன் தோன்ற
கைவாள் உருவ என்கைவாள் வாங்க" 18 என்கிறது சிலம்பு.

இந்நிகழ்வுகள் வழி, இளங்கோவடிகள் மதுரையில் திறமையான காவலர்கள் இருந்தாலும் வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதற்கேற்பக் கள்வரும் இருந்தனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

## தொகுப்புரை

1. குடிமக்கள் காப்பியம் என்ற சிறப்பிற்குரிய சிலம்பு மூவேந்தர் காப்பியமாகவும் அந்நாளைய அரசாட்சியை விளக்கும் வரலாற்றுப் பெட்டகமாகவும் உள்ளது.
2. மிகவும் தொன்மை வாய்ந்த நகரமாக, குடிமக்கள் இடம் பெயர்தலை அறியாப் பெருமை கொண்டதாக மதுரை விளங்கியதை மதுரைக் காண்டம் நன்கு உணர்த்துகிறது.


 Copyright: Author

3. சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர்களும் அந்நாளில் செங்கோலாட்சி புரிந்து வரினும் மதுரை பாண்டியர்களால் சிறப்புப் பெற்று பாண்டியர்களின் அடையாளமாகவே இன்று வரை இருந்து வருகிறது.
4. மதுரையை ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் பெருமை மிக்க மரபிலே தொன்றி, சிறந்த வீரனாக செங்கோல் ஆட்சி புரிந்துள்ளான். நெடுஞ்செழியன் ஆட்சியில் பாதுகாவல் நிறைந்திருந்தது. பொருள் வளமும் மிகுந்திருந்தது.
5. விதியின் வலியால் பொற்கொல்லன் சொல்கேட்டு நீதி வழுவியதை அறிந்த நெடுஞ்செழியன் தவறை உணர்ந்து உடனே உயிரை விட்டான் . பலியெனின் தாங்காத மனம் கொண்ட பாண்டியரின் ஆடசித் திறம் இதன் வழி வெளிப்படுகிறது.
6. காவல் நிறைத்திருந்த மதுரையிலும் கள்வர்கள் இருந்ததனை மதுரைக் காண்டம் வழி அறியமுடிகிறது.

.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.